## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 294/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

IN THE COURT OF : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU.

Deposition of witness for : LW-2/PW-5

Name : ராமலிங்கம்

Father/Husband's Name :

Village : காட்டாங்கொளத்தூர்

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.03.2025.

**முதல் விசாரணை–**

நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒருநாள் இரவு சுமார் 9.30 மணியளவில் எனது நண்பர் ராமகிருஷ்ணனை மறைமலைநகரிலுள்ள பேருந்து நிறுத்தத்தில் பேருந்து ஏற்ற வரும்போது அப்போது செங்கல்பட்டு - தாம்பரம் மார்க்கமாக இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் சாலையை கடந்த ஒரு நபர் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றும், அப்போது அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு மயக்கநிலையில் இருந்தவரை 108 ஆம்புலன்சில் ஏற்றி செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்திய நபரை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். பின்னர், நான் வீட்டிற்க சென்று விட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை**

செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் நோக்கி செல்லும் சாலையில் பேருந்து நிறுத்தம் உண்டு. அதேபோல் தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு நோக்கி சாலையிலும் பேருந்து நிறுத்தம் உண்டு. நான் செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் நோக்கி செல்லும் சாலையிலுள்ள பேருந்து நிறுத்தத்தில், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் இருந்தேன். இந்த விவரத்தை போலீசார் என்னை விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. 108 ஆம்புலன்சுக்கு நான் போன் செய்தேன். இந்த விவரத்தையும் போலீசார் என்னை கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை. 108 ஆம்புலன்சில் அடிப்பட்ட நபரை ஏற்றிவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அதற்கு பிற்பாடாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அடிப்பட்ட நபர் யாரென்று எனக்கு தெரியாது. அவரது மகனையும் தெரியாது.

பொதுவாக சாலையை கடப்பதற்கு ஒருநபர் மேற்கிலிருந்து கிழக்கும் செல்லலாம், கிழக்கிலிருந்து மேற்கிலும் செல்லலாம். சம்பவம் நடந்த இடத்தருகே பாதசாரிகள் நடப்பதற்கு Zebra Crossing எதுவும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தருகே ஐந்தாறு நபர்கள் இருந்தார்கள். யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் நின்று கொண்டிருந்த பேருந்து நிறுத்தத்தில் மின்விளக்கு எதுவும் இல்லை. நான் நின்றுகொண்டிருந்தபோது டமால் என்று சத்தம் கேட்டது. சத்தம் கேட்டவுடனே நான் ஓடிச்சென்று அந்த நபரை தூக்கினோம். நான் பேசிக்கொண்டிருந்தேன், அப்போது டமால் என்று சத்தம் கேட்டது நான் திரும்பி பார்த்து ஓடிச்சென்றேன். நான் நின்று பேசிக்கொண்டிருந்தபோது பெரியவர் சாலையை கடந்தார். அப்போது வாகனத்தை வேகமாக ஓட்டி வந்து அந்த பெரியவர் மீது இடித்தார். நான் இருசக்கர வாகனத்தில் காட்டாங்கொளத்தூரிலிருந்து மறைமலைநகர் வந்தேன். சாலையை கடந்த நபர் கிழக்கிலிருந்து மேற்காக சென்றார். கிழக்கு பக்கம் உள்ள சாலை செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் செல்லும் சாலை.

மேற்கு பக்க சாலையில் நான் நின்றுகொண்டிருந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைக்கே போலீசார் இரவு சுமார் 9.45 மணியளவில் ரோந்துக்கு வந்தனர். அப்போது என்னை விசாரணை செய்தனர். அவர்கள் எந்த போலீசார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் கையொப்பம் பெறவில்லை. போன் நம்பர் மட்டும் கேட்டார்கள். போலீசார் குறிப்பு எதுவும் எடுக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில் போலீசார் என்னை விசாரித்து எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை. பேருந்து நிலையத்தில் இருந்துகொண்டிருந்த மற்ற எந்த சாட்சிகளையும் போலீசார் விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக யார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியாது.வழக்கு சம்பந்தமாக போலீசார் யார் யாரை விசாரணை செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. அடிப்பட்ட நபருக்கு பின்னிட்டு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

இந்த வழக்கில் இறந்த நபரின் உறவினர்கள் தாக்கல் செய்த நஷ்ட ஈடு வழக்கிற்காக என்னை அணுகினார்கள் என்றும், பின்னிட்டு இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்க கேட்டார்கள் என்றும், அதனால் நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.